# சுந்தர மூர்த்தி நாயனார் புராணத்தில் மங்கள நிகழ்வுகளில் இயற்கை

# Nature in Auspicious Events in the Sundara Moorthy Nayanar Puranam

மதனா கந்தசாமி / Matana Kandasamy[1]
இரவீந்திரன் மாரயா / Ravindaran Maraya[2]

Date of submission: 2025-06-08
Date of acceptance: 2025-06-25
Date of Publication: 2025-07-23
Corresponding author's Name:
Ravindran Maraya
Email: ravindaranm@um.edu.my

**Abstract**

This study explores the representation and significance of nature in the auspicious ceremonies described in the Sundara Moorthy Nayanar Puranam, a narrative embedded within the 12th-century *Periya Puranam* by Sekkizhar. Adopting an ecocritical framework, particularly the principles of Deep Ecology, the research examines how natural elements such as flowers, plants, water, fire, and organic decorative materials are integrated into ritual practices with cultural, spiritual, and ecological meanings. The analysis demonstrates that these materials, drawn entirely from renewable resources, align with concepts of environmental sustainability and circular resource use. Furthermore, the study identifies the medicinal and therapeutic benefits of these natural substances, highlighting their role in promoting physical well-being, mental harmony, and spiritual purification. The findings suggest that these ritual practices reflect an intrinsic human–nature relationship based on mutual respect, sacred symbolism, and ecological awareness in ancient Tamil society. By situating the Sundara Moorthy Nayanar Puranam within the broader tradition of Tamil Shaivism, this research contributes to understanding how cultural heritage can inform contemporary environmental ethics. The study concludes that auspicious ceremonies in the *Periya Puranam* are not merely religious or social events, but also living embodiments of sustainable practices and ecological consciousness, offering valuable insights for integrating environmental preservation into modern cultural traditions.

**Keywords:** Sundara Moorthy Nayanar Puranam, Deep Ecology, Ecocriticism, Sustainability, Tamil Shaivism

[1]The author is a Ph.D candidates in the Department of Indian Studies, Universiti Malaya, Malaysia. S2120629@siswa.um.edu.my

[2]The author is a Head of Department of Indian Studies, Universiti Malaya, Kuala Lumpur, Malaysia. ravindaranm@@um.edu.my

## ஆய்வு அறிமுகம்

இயற்கையும் ஆன்மிக வாழ்வியலும் பண்டைய தமிழரின் சமூக கட்டமைப்பில் ஓர் அகமகிழ்ந்த உறவை கொண்டிருந்தன. பெருமை வாய்ந்த நாயன்மார்கள் வரலாற்றைச் சொல்கின்ற பெரியபுராண நூல், தமிழரின் வாழ்க்கைமுறை, சடங்குகள், மற்றும் பழக்கவழக்கங்களில் இயற்கை எவ்வாறு இணைந்திருந்தது என்பதற்கான முக்கிய சான்றாகும்.

இந்நூலில் கூறப்படும் சுந்தரர் (சுந்தர மூர்த்தி நாயனார்) எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தமிழ்ச் சைவ நாயன்மார்களில் மிக முக்கியமான மூவரில் இவரும் ஒருவர் ஆவார். இவரின் தமிழ்த் தொண்டு அளபரியதாகும். சுந்தரர், இசை, கலை, பக்தி ஆகியவற்றின் உயரிய நிலையை நிலைநாட்டியவர். மேலும், இவர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர். அவ்வகையில், சுந்தர மூர்த்தி நாயனார் திருமண வைபவம், ஒரு சாதாரண திருமண நிகழ்வை விடவும், பசுமை இயற்கை வளங்களை மையமாகக் கொண்ட ஒரு சடங்காகும். அவரின் திருமண நிகழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இயற்கை இயைந்திருப்பதைக் கண்கூடாகக் காண முடிகிறது.

இக்கட்டுரை, சுந்தரர் திருமணச் சடங்குகளில் இயற்கையின் பங்கு மற்றும் அதன் பண்பாட்டு முக்கியத்துவத்தை, பெரியபுராணத்தில் உள்ள செய்யுள் அடிப்படையில் ஆய்வு செய்யும் நோக்கத்துடன் அமைகிறது. இது, பண்டைய தமிழர் வாழ்க்கையில் இயற்கை எவ்வாறு இயைந்து இருந்தன என்பதை விளக்குகிறது.

## ஆய்வு நோக்கம்

இவ்வாய்வின் முதன்மை நோக்கம், பெரியபுராணம் நூலில் இடம்பெறும் சுந்தர மூர்த்தி நாயனார் திருமணச் சடங்குகளில் இயற்கையின் பிரதிநிதித்துவம், அதன் கலாச்சார, ஆன்மீக மற்றும் சுற்றுச்சூழல் அர்த்தங்களை ஆராய்வதாகும். குறிப்பாக, மலர்கள், தாவரங்கள், நீர், தீபம், மற்றும் பிற இயற்கை வளங்கள் சடங்குகளில் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகின்றன என்பதையும், அவை சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, சுழற்சி வளப் பயன்பாடு, மற்றும் மருத்துவ நன்மைகள் ஆகிய கோணங்களில் என்ன பங்கு வகிக்கின்றன என்பதையும் வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும், பண்டைய தமிழ் சமூகத்தில் காணப்படும் மனிதர் மற்றும் இயற்கை பரஸ்பர மரியாதை மற்றும் பசுமை விழிப்புணர்வை, தற்காலச் சமூகத்தில் சுற்றுச்சூழல் நெறிமுறைகளுடன் ஒருங்கிணைக்கக் கூடிய வழிமுறைகளை முன்வைப்பதும் இவ்வாய்வின் முக்கிய இலக்காகும்.

## ஆய்வு முறைமை

இக்கட்டுரை தரவுசார்ந்த இலக்கிய ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதன்மை ஆதாரமாக 12ஆம் நூற்றாண்டு சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் நூலில் இடம்பெறும் சுந்தர மூர்த்தி நாயனார் மங்கள நிகழ்வுகளில் காணப்படும் இயற்கை சார்ந்த கூறுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்செய்யுட்கள் முதலில் அடையாளம் காணப்பட்டு, பின்னர் சுற்றுச்சூழல் விமர்சனக் கோணத்தில், குறிப்பாக ஆழ்ந்த சுற்றுச்சூழல் தத்துவக் கட்டமைப்பின் அடிப்படையில், அவற்றின் பண்பாட்டு, ஆன்மீக, மற்றும் சுற்றுச்சூழல் அர்த்தங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இதனுடன், மலர்கள், தாவரங்கள், நீர், தீபம், மணப்பொருட்கள் போன்ற இயற்கை வளங்களின் பயன்பாடு, அவற்றின் மருத்துவ மற்றும் சிகிச்சை நன்மைகள், மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை (*sustainability*) சார்ந்த அம்சங்கள் முறையாக ஆய்வு செய்யப்பட்டன. இவ்வாறு, உரை பகுப்பாய்வு முறையின் மூலம், மங்கள நிகழ்வுகளில் இயற்கையின் பங்கு பன்முகக் கோணங்களில் விளக்கப்பட்டு, பண்டைய தமிழர் வாழ்வியலில் நிலைத்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு எவ்வாறு பின்பற்றப்பட்டது என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## பெரியபுராண அறிமுகம்

பெரியபுராணம் என்பது 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் என்பவரால் எழுதப்பட்ட, தமிழ்ச் சிவபக்தி இலக்கியத்தின் உச்சக்கட்டமான காவியமாகும். இது சைவ நாயன்மார்கள் எனப்படும் 63 திருநாயன்மார்களின் ஆன்மிக வாழ்க்கை வரலாற்றைக் கூறும் முக்கியமான புராண நூலாகும். திருவஞ்சியம் என்று அறியப்படும் இந்த காவியம், சமய, இலக்கிய, மற்றும் சுற்றுச்சூழல் உணர்வுகளின் பல்லாயிரம் ஆண்டு கால பிணைப்பை எடுத்துரைக்கிறது (ஆறுமுகம், 2024).

பெரியபுராணம், இலக்கியக் கவனத்தின் எல்லைகளை தாண்டி, தத்துவத் தழுவல்களுடன் இயற்கையின் பன்முகப்படியான உருவங்களையும், அவற்றின் ஆன்மிகத்தன்மையையும் வெளிப்படுத்துகிறது. இந்த இலக்கியத்தில் காணப்படும் இயற்கை கூறுகளான மலர்கள், நதிகள், மரங்கள், காலநிலை, காலச்சுழற்சி என அனைத்தும் வெறும் பின்னணியாக அல்லாமல், பக்தி, தர்மம், மற்றும் நிலைத்த வாழ்வியலின் வடிவங்களில் விரிகின்றன.

இயற்கை, பெரியபுராணத்தில் புனிதத்திற்குரியதொன்றாகத் தோன்றுகிறது. உண்மையான பக்தி என்பது கடவுளுடன் மட்டுமல்ல, அவரை அடைவதற்கான சூழலுடன், அதாவது இயற்கையுடன் ஒற்றுமையில் வாழ்வதாகவே கருதப்படுகிறது. இது சைவ சித்தாந்தத்தில் காணப்படும் பாச, பதி, பசு என்ற மூன்றுக்கோணக் கோட்பாட்டையும் பிரதிபலிக்கிறது, இதில் இயற்கை 'பாச' எனும் பந்தமாகவும், வழியாகவும் விளங்குகிறது (முருகேந்திரன், 2022).

முன்னோர்கள் இயற்கையை வணங்கும் பாரம்பரியம், பெரியபுராணத்தின் ஊடாக கலாச்சாரமாகவும், தர்ம அடிப்படையிலுமான அடையாளமாகவும் நிலைபெறுகிறது. நாயன்மார்கள் இயற்கையின் அடையாளங்களோடு பிணைந்த வாழ்க்கையை நடத்தினர்; சிலர் மரங்களில் தவம் செய்தனர், சிலர் புனிதநதிகளில் அர்ச்சனை செய்தனர், சிலர் பூமியின் வலி உணர்ந்து கருணையுடன் செயல்பட்டனர். இது சுற்றுச்சூழல் உளவியல் மற்றும் பக்தி இலக்கியம் இடையே உள்ள ஆழமான உறவைக் காட்டுகிறது (இராஜகோபால், 2021).

### பெரிய புராணத்தில் இயற்கை

பெரியபுராணம் என்பது ஆன்மீக பெருமையுடன் இயற்கையின் அழகு, பசுமை, மற்றும் அதன் புனித நிலையை இணைத்து கூறும் ஓர் இலக்கிய காவியம் (கண்ணன், 2019). இதில் 63 நாயன்மார்கள் வாழ்ந்த இடங்கள், கோவில்கள், மற்றும் அந்தச் சம்பவங்களின் சூழ்நிலைகள் இயற்கையைச் சுற்றி அமைந்திருக்கின்றன. பசுமையான காடுகள், விலங்குகள் நிறைந்த பரப்புகள், மலர்கள் தழைத்த தோட்டங்கள், புனிதநீரும் புனிதமரங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன (கார்த்திகேயன், 2021).

இயற்கை கூறுகள், வழிபாட்டின் கட்டுப்பாடுகளாக அல்ல, புனித நிகழ்வுகளுக்குப் பின்புலமாகவும், பக்தி உணர்விற்கும் ஊட்டமளிக்கின்ற அணிகலன்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, பூமாலை, சந்தனம், பசுங்கர்பூரம் போன்ற வாசனைப் பொருட்கள், மற்றும் அருகம்புல், நீர் போன்ற இயற்கை வளங்கள் புனிதத்தின் அடையாளங்களாகவே விளங்குகின்றன. இவை, சடங்குகளின் போது பரிசுத்தத்தை விளக்கும் கருவியாகவும் இருக்கின்றன (குமார், 2021).

பெரும்பாலான சைவக் கோவில்கள் இயற்கையை மையமாகக் கொண்டு விளங்குகின்றன. அவ்வகையில், நீர்நிலைகள், மரங்கள் சூழ்ந்த தலங்கள், புனிதமான மலர்கள் விளைந்த இடங்கள் என்று இயற்கையோடு ஆன்மீகம் ஒன்றிணைந்து வருகின்றது. இதனால்தான், பெரியபுராணம், தமிழரின் சுற்றுச்சூழல் பார்வையும் ஆன்மீக வாழ்வியலும் ஒருங்கிணைந்த பாரம்பரியக் காட்சியாகக் கருதப்படுகின்றது (இராஜகோபால், 2021).

### சுந்தரமூர்த்தி நாயனார்

சுந்தர மூர்த்தி நாயனார், தமிழ்ச் சைவ நாயன்மார்களில் ஒருவராகவும்,

தேவாரப்பாடல்களை இயற்றிய மூவர் நாயன்மார்களில் (திருமுறை மூவர்) ஒருவராகவும் குறிப்பிடப்படுகிறார் (முருகேசன், 2018). இவர் பல்லவர்கள் ஆட்சி செய்த காலமான எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என அறிஞர்கள் கருதுகின்றனர் (சுப்பிரமணியம், 2019). இவர் பிறந்தது தென்னக தமிழகம் பகுதியில், திருநாவலூர் என்ற ஊரில். பிறந்த பெயர் நம்பி அருரார் என்றும், சுந்தரச் சொற்பயனுள்ள குரலால் "சுந்தரர்" என்றுப் பொதுவாக அழைக்கப்பட்டார்.

அவர் தேவாரம் எனப்படும் பன்னிரு திருமுறைகளில் எழுதிய பக்திப்பாடல்கள், இசைநயமும் ஆன்மீகத் தாக்கமும் கொண்டவை (Pechilis, 2011). இவை சைவ சமய வளர்ச்சிக்கு முக்கியக் களமாக அமைந்தன. அவரது பாடல்களில் சிவபெருமானுடன் உரையாடும் தன்மை, பக்தி இலக்கியத்தில் புதிய உந்துதலை ஏற்படுத்தியது. இவர் பாடிய திருத்தொண்டத் தொகை, சைவ நாயன்மார்கள் பட்டியலை முதன்முதலாக தொகுத்து வழங்கும் பாடலாகும். இது பெரியபுராணம் போன்ற இலக்கியங்களுக்கு முன்னோடியாக அமைந்தது (Peterson, 1989).

### சுந்தர மூர்த்தி நாயனார் திருமணச் சடங்கில் இயற்கை

சுந்தர மூர்த்தி நாயனாரின் திருமணச் சடங்கு, பண்டைய தமிழர் வாழ்வியல் மற்றும் சைவ மரபில் இயற்கையின் புனிதப் பங்களிப்பை விளக்கும் ஒரு முக்கியக் களமாகும். இந்தச் சடங்குகளில் மலர்கள், விதைகள், வாசனைப்பொருட்கள், நீர், அருகம்புல், சந்தனம் போன்ற இயற்கை மூலங்கள் வெறும் அலங்கார அல்லது பயன்பாட்டு பொருட்களாக மட்டுமல்லாது, ஆன்மிகச் சின்னங்களாகவும், சமூக ஒற்றுமையின் குறியீடுகளாகவும் கருதப்படுகின்றன. பெரியபுராணத்தில் பதிவாகியுள்ள இச்சடங்குகள், இயற்கை–மனிதர் இடையேயான பரஸ்பர உறவையும், அந்த உறவு புனித நிகழ்வுகளில் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகின்றதையும் தெளிவுபடுத்துகின்றன.

**அட்டவணை 1 :**

**இயற்கை குறித்துப் பெரியபுராணத் தரவுகள்.**

| எண் | செய்யுள் அடி (பெரிய புராணம்) | பொருள் |
|---|---|---|
| 0157 | இகழ்ச்சியொன் றானும் இன்றி ஏந்துபூ பந்தர் | பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தல் அமைத்து |
| 0157 | நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி நீள்முளை சாத்தினர் | கூடி முளை சாத்தும் சடங்கைச் செய்தனர் |
| 0161 | வாசநெய் ஊட்டி மிக்க மலார்விரை அடுத்த தூநீர்ப்<br>பாசனத் தமைந்த பாங்கரப் பருமணிப் பைம்பொன் திண்காள்<br>ஆசனத் தணிநீர் ஆட்டி அரிசனஞ் சாத்தி அன்பால்<br>ஈசனுக் கினியான மேனி எழில்பெற விளக்கி னார்கள் | மனம் கமழும் நெய்புகையூட்டிய பாத்திரத்தில் மிகுந்த மலர்கள், நறுமணப்பொருடகள் போன்றவற்றில் நனைக்கப்ப்ட்ட நீரை நிரப்பினர். நம்பி ஆரூரரை நீராட்டி வாசனைப் பொருள்களைப் பூசி, அவரது பேனியை மேலும் அழகு பெறச் செய்தனர். |
| 0163 | தூநறும் பசுங்கர்பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதில்<br>ஆனதண் பனிநீர் கூட்டி அமைந்தசந் தனச்சே றாட்டி<br>மான்மதச் சாந்து தோய்ந்த மங்கல்க் கலவைச் சாத்தி | நல்ல மணமுடைய பச்சைக்கற்பூர பொடியையும் மலர்களிலிருந்து எடுக்கப்பட்ட சந்தனக் குழம்பையும், கத்தூரி சாந்தையும் பூசினர். |
| 0164 | துமலாப் பிணையல் மாலை துணர்இணர்க் கண்ணி கோதை<br>தாமம்என் றினைய வேறு தகுதியால் அமைசச் சாத்தி | தூய்மையான மலர்களால் ஆன மிணையல், மாலை, கண்ணி, கோதை, தாமம் என்ற பலவகைப் பூமாலைகலையும் அணிந்தார். |
| 0170 | நிறைகுடம் தூபம் தீபம் நெருங்குபா லிகைகள் ஏந்தி<br>நறைமலர் அருகு சுண்ணம் நறும்பொரி பலவும் வீசி<br>உறைமலி கலவையின் சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி<br>மறையவர் மடலார் வள்ளல் மணம்நதிர் கொள்ள வந்தார் | நிறைகுடம், தூபம், விளக்கு, முலைப்பாலிகைகள் முதலான மங்களப்பொருள்களை எடுத்துக்கொண்டும் பூக்கள், அருகம்புல், பொன் சுண்ணப்பொடி, பொறி முதலியவற்றை இளைத்து கொண்டு, சந்தனம் கலந்த பன்னீர் தெளித்துக்கொண்டும் வுத்தூரின் அந்தணரும் மங்கையரும் வருகின்றவர்களை எதிர்கொண்டு வரவேற்றனர். |
| 0330 | சந்தனத் தளறு தோய்ந்த குங்குமக் கலவையை சாத்தி | குங்குமப்பூ கலந்த சந்தனக் கலவையைப் பூசினார் |

மூலம்: சுந்தரர் திருமணச் சடங்குகளில் இயற்கை கூறுகள் (செய்யுள்)

0157 செய்யுளில் காணப்படும் “இகழ்ச்சியொன் றானும் இன்றி ஏந்துபூ பந்தர்” என்ற வரிகள், திருமண நிகழ்வுக்காக மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தலின் அமைப்பை எடுத்துக்காட்டுகின்றன. இந்த பந்தல், பண்டைய தமிழர் வாழ்வியலில் அழகியல், புனிதம் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பு ஆகிய மூன்றையும் ஒருங்கிணைக்கும் ஒரு அடையாளமாக விளங்குகிறது. பந்தல் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மரக்கிளைகள், பச்சை இலைகள், மலர்கள் போன்ற அனைத்தும் இயற்கையில் கிடைக்கக் கூடியவை. மேலும், பயன்பாட்டிற்குப் பிறகு, மட்கி மண்ணில் கலக்கக்கூடிய பொருட்கள் என்பதால், அவை இயற்கையின் சுழற்சியை குலைக்காமல் பயன்படுகின்றன (கண்ணன், 2019). இவ்வாறான பயன்பாடு செயற்கைப் பொருட்களைத் தவிர்த்து, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை முன்னிறுத்தும் பசுமை விழிப்புணர்வைக் காட்டுகிறது. Deep Ecology தத்துவக் கோணத்தில், இந்த அலங்காரம் மனித வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளில் இயற்கையை சமமாகப் பங்குபெறச் செய்யும்

உலகப்பார்வையை பிரதிபலிக்கிறது (Devall & Sessions, 1985).

இதனுடன் தொடர்புடைய அதே செய்யுளில் இடம்பெறும் "நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி நீள்முளை சாத்தினர்" என்ற வரிகள், பசுமை அடையாளங்களால் நிறைந்த முளை சாத்தும் சடங்கைக் குறிக்கின்றன. பொதுவாக அருகம்புல் அல்லது தானியங்கள் போன்ற பசுமைத் தாவரங்களை நட்டுவைக்கும் இச்சடங்கு, வாழ்வின் தொடர்ச்சி, வளம், மற்றும் செழிப்பு ஆகியவற்றின் குறியீடாக விளங்குகிறது (வெங்கலேசன், 2021). உயிரியல் கோணத்தில், முளை நட்டல் மண் ஈரப்பதத்தை பேணுவதோடு, நுண்ணுயிர் செயற்பாட்டையும் ஊக்குவிக்கிறது; இது இயற்கை அமைப்பின் (ecosystem) புதுப்பிப்பின் ஒரு முக்கிய கூறாகும் (மீனாச்சி, 2023). சமூக அளவில், இந்தச் சடங்கு சமூக பங்கேற்பையும், பொதுவான பசுமை முயற்சியையும் வலுப்படுத்துகிறது.

இதனைத் தொடர்ந்து, 0161 செய்யுளில் "வாசநெய் ஊட்டி. மலர்விரை அடுத்த தூநீர்" என்ற பகுதி, பண்டைய தமிழர் வாழ்வியலில் புதுப்பிக்கக்கூடிய இயற்கை வளங்களின் பயன்பாட்டை வெளிப்படுத்துகிறது. மலர்கள், வாசநெய், வாசனைச் சாறுகள், தூய்மையான நீர் ஆகியவை அனைத்தும் சடங்குகளில் பயன்படுத்தப்பட்டன; இவை நிகழ்வுக்குப் பின் இயற்கைக்கு மீண்டும் கலக்கக்கூடியவை என்பதால், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாது. இது circular economy என்ற நவீன கருத்தோடு ஒத்திசைவாகும் (இராஜகோபால், 2021). மருத்துவ அடிப்படையில், வாசநெய் இரத்த ஓட்டத்தை மேம்படுத்தி, தசை சோர்வை குறைக்கும் பண்புகளைக் கொண்டுள்ளது. மலர்களிலிருந்து பெறப்படும் வாசனைச் சாறுகள் நறுமண சிகிச்சை (aromatherapy) மூலம் மனஅழுத்தத்தை குறைத்து, மன அமைதியை அதிகரிக்கின்றன. தூய்மையான நீரோ உடலைச் சுத்தப்படுத்தி, நோய் கிருமி பாதிப்பைக் குறைக்கிறது (குமார், 2021). இவ்வாறு, இந்தச் சடங்கு உடல் மற்றும் மன நலனைக் காக்கும் செயல்பாடுகளையும், இயற்கை வளங்களின் நிலைத்த பயன்பாட்டையும் ஒருங்கிணைக்கிறது.

0163 மற்றும் 0330 செய்யுள் அடிகளில் குறிப்பிடப்படும் பச்சைக்கற்பூரம், சந்தனம், கத்தூரி, குங்குமம் போன்ற இயற்கை மணப்பொருட்கள், செயற்கை வேதிப் பொருட்கள் இல்லாமல் தயாரிக்கப்படுவதால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாது. பச்சைக்கற்பூரம் குளிர்ச்சி அளிப்பதுடன், சுவாசக் குழாய் நலனையும் மேம்படுத்துகிறது; சந்தனம் உடல் வெப்பத்தை குறைத்து, தோல் நோய்களைத் தடுக்கும்; கத்தூரி மன உற்சாகத்தை அதிகரித்து, ஆன்மீக மனநிலையை உயர்த்துகிறது; குங்குமம் இரத்த ஓட்டத்தை ஊக்குவித்து, தோல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது (கலைவாணன், 2017). அதுமட்டும்ன்றி, இப்பொருட்களின் மணம் விழாக்களில் ஆனந்த உணர்வை மேம்படுத்தி, மனஅழுத்தத்தை குறைக்கின்றன. இவை அனைத்தும் மணவிழாவில் ஆன்மீகச் சின்னங்களாகவும், மனிதந் மற்றும் இயற்கை இடையிலான பரஸ்பர மரியாதையின் ஊடகங்களாகவும் அமைகின்றன.

இவற்றைத் தவிர்த்து, 0164 மற்றும் 0170 செய்யுள்களில் இடம்பெரும் மலர்கள், தாமரை, பூமாலைகள், தாமம், தீபம், அரிசி போன்ற இயற்கை வளங்களின் ஒருங்கிணைந்த பயன்பாடு விவரிக்கப்படுகிறன. மலர்கள் மற்றும் தாமரை பருவத்தோடு இயற்கையாக வளரும் வளங்கள்; இவை சூழலை மணமிக்கதாக்கி, தூய்மையான காற்றை வழங்குகின்றன. தாமம் மற்றும் தீபம் எரிக்கப் பயன்படுத்தப்படும் இயற்கை எண்ணெய்கள், உலோகங்கள், மண் போன்றவை சிதைவடையும் வளங்களாகும் (இராஜவேல், 2019). அரிசி செழிப்பு மற்றும் நலனின் அடையாளமாக மட்டுமல்லாமல், சடங்கில் ஆசீர்வாதத்தைக் குறிக்கும் பொருளாகவும் விளங்குகிறது. தீபத்தின் ஒளி ஆன்மீகத் தூய்மையை குறிக்கிறது; அதே சமயம், தாமம் எரியும்போது உற்பத்தியாகும் மணப்புகை காற்றை கிருமி நீக்கி, மன அமைதியை அதிகரிக்கிறது (குமரவேல், 2022).

இந்த செய்யுள்களில் விவரிக்கப்படும் அனைத்து சடங்குகளும், பண்டைய தமிழர் வாழ்வியலில் இயற்கை வளங்கள் அழகியல் மற்றும் சடங்கு தேவைக்காக மட்டுமன்றி,

சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, மருத்துவ நன்மைகள், மற்றும் மனிதர்–இயற்கை ஆன்மீக பிணைப்பை ஒருங்கிணைக்கும் பன்முகக் கருத்துகளுடன் பயன்பட்டதைத் தெளிவுபடுத்துகின்றன. இயற்கை, பண்டைய தமிழர் பண்பாட்டில் வெறும் ஆதார வளமாக அல்லாது, மனித வாழ்க்கையின் புனித நிகழ்வுகளில் பங்குபெறும் உயிர்ப்பும் பரிமாற்றமும் கொண்ட பங்காளியாகக் கருதப்பட்டது (Monius, 2004). இதன் விளைவாக, திருமண நிகழ்வுகள் ஒரு கலாச்சாரச் சடங்காக மட்டுமன்றி, மனிதரும் இயற்கையும் ஒருங்கிணைந்த வாழ்வியல் கொண்டாட்டமாகப் பொருள்பெறுகின்றன; இது, உன்னத மரியாதை, புனித அடையாளங்கள், மற்றும் பசுமைச் சிந்தனைகளை ஒரே மேடையில் கொண்டுவரும் சமூக–சூழல் தத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

## முடிவு

பெரியபுராணத்தில் விவரிக்கப்படும் சுந்தர மூர்த்தி நாயனார் திருமணச் சடங்கு, பண்டைய தமிழர் வாழ்வியல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, மற்றும் ஆன்மீக மரபுகள் ஒருங்கிணைந்த பன்முகத் தன்மையுடைய நிகழ்வாக விளங்குகிறது. மலர்கள், தாவரங்கள், மணப்பொருட்கள், நீர், தீபம், அரிசி, மற்றும் இயற்கை அலங்காரங்கள் ஆகிய அனைத்தும், நிலைத்தன்மை மற்றும் சுழற்சி பொருளாதாரம் கோட்பாடுகளுக்கு ஏற்ப, சுற்றுச்சூழலைக் காக்கும் மற்றும் புதுப்பிக்கும் விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பொருட்களின் பயன்பாடு, இயற்கை வளங்களைச் செயற்கைப் பொருட்களால் மாற்றாமல், அவற்றின் இயற்கைச் சுழற்சியைக் குலைக்காமல் பயன்படுத்திய பசுமை அறிவை வெளிப்படுத்துகிறது.

மருத்துவக் கோணத்தில், இவ்வியற்கைப் பொருட்கள் உடல் மற்றும் மனநலத்திற்கு நேரடி நன்மைகளை வழங்குகின்றன; நறுமண சிகிச்சை (aromatherapy), உடல் வெப்பக் கட்டுப்பாடு, மற்றும் கிருமி எதிர்ப்பு பண்புகள் போன்ற பல்வேறு சுகாதார பலன்களை அளிக்கின்றன. ஆழமான சுற்றுச்சூழல் தத்துவத்தின் அடிப்படையில், இச்சடங்குகள் மனித வாழ்க்கையின் முக்கிய தருணங்களில் இயற்கையைப் பங்குபெறச் செய்து, மனிதர்–இயற்கை இடையிலான பரஸ்பர மரியாதை மற்றும் புனித பிணைப்பை வலுப்படுத்துகின்றன.

கலாச்சார ரீதியாக, இத்தகைய திருமணச் சடங்குகள் பண்டைய சமூகத்தின் பசுமை விழிப்புணர்வு, ஆன்மீக ஒழுக்கம், மற்றும் சமூக ஒற்றுமையை பிரதிபலிக்கும் நிலையான சின்னங்களாக அமைகின்றன. இவை வெறும் பாரம்பரிய வழிபாடுகளாக அல்லாது, மனிதர் மற்றும் இயற்கை ஒன்றிணைந்த வாழ்வியல் தத்துவத்தின் உயிர்ப்புமிக்க சாட்சிகளாகக் காணப்படுகின்றன.

இந்த ஆய்வு, பாரம்பரிய திருமணச் சடங்குகளில் இயற்கையின் பங்கு குறித்த புரிதலை விரிவுபடுத்துவதோடு, நவீன சமூகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் பண்பாட்டு மரபுகளையும் ஒருங்கிணைக்கும் பாதையை முன்வைக்கிறது. எதிர்கால ஆய்வுகள், பிற பண்டைய இலக்கியங்களில் இடம்பெறும் இதேபோன்ற சடங்குகளை ஒப்பீட்டு கோணத்தில் ஆராய்வதன் மூலம், தமிழரின் சூழல்–ஆன்மீக உறவை மேலும் ஆழமாகப் புரிந்துகொள்ள வழிவகுக்கும்.

## References

Arumugam, I. (2024). *Ambivalent Ādi: Fecundity, aridity and sacrality during a Tamil Hindu month. Religions of South Asia, 18*(3), 383–407. https://doi.org/10.1558/rosa.26451

Devall, B., & Sessions, G. (1985). *Deep ecology: Living as if nature mattered.* Peregrine Smith.

Devall, B., & Sessions, G. (1985). *Deep ecology: Living as if nature mattered*. Salt Lake City, UT: Peregrine Smith Books.

Kalaivanan, R. (2017). "Medicinal and cultural significance of traditional aromatic substances in South Indian

rituals", *Journal of Ethnobotany Research and Applications*, 15(3), 45- 56.

Kannan, R. (2019). "Environmental philosophy in Tamil Bhakti poetry: A study of Periya Puranam", *Journal of Tamil Studies*, 104(2), 45–58.

Karthikeyan. (2021). "Environmental ethics and sacred groves in Periya Puranam", *International Journal of Tamil Literature*. 12(1), 55–70.

Kumar, V. (2021). "Nature and devotion: Environmental ethics in the Periya Puranam", *Journal of South Asian Religious Studies, 8(3), 88–102.*

Kumaravel, P. (2022). "Symbolism and health benefits of traditional lamps and incense in Tamil rituals". *International Journal of Tamil Culture and Heritage*, 8(1), 55–68.

Meenakshi, P. (2023). "The ecological role of ritual plantings in Tamil culture", *Asian Journal of Environmental Anthropology*. 9(2), 101–115.

Monius, A. (2004). *Imagining a place for Buddhism: Literary culture and religious community in Tamil-speaking South India*. Oxford University Press.

Murugendran, P. (2022). *Pāśa-Pati-Pasu dalam Periya Puranam:* "Hubungan alam semula jadi, Tuhan dan makhluk hidup", *Jurnal Kajian Kesusasteraan Bhakti Tamil*. 7(1), 45– 60.

Pechilis, K. (2011). "Bhakti traditions", *Journal of Hindu Studies*. 4(2), 137–143.

Peterson, I. V. (1989). "Singing of a place: Pilgrimage as metaphor and motif in the Tēvāram songs of the Tamil Śaivite Saints". *Journal of the American Oriental Society*. 109(4), 629–652.

Rajagopal, A. (2021). "The philosophy of nature in Periya Puranam", *International Journal of Social Science and Human Research*. 4(5), 1120–1128.

Rajavel, M. (2019). "Natural materials in Tamil religious rituals: An environmental perspective". *Indian Journal of Environmental History*. 5(2), 33–47.

Subramaniam, P. (2019). "Pallavar kāla caivap pāṭalāciriyarkaḷ: Varalāṟṟup pārvai (Penyair Lagu Saiva Zaman Pallava: Suatu Tinjauan Sejarah)", *Kesusasteraan Agama Tamil*. 12(1), 15–30.

Venkatesan, S. (2021). "Seeds of prosperity: Cultural and ecological dimensions of sprouting rituals in Tamil Nadu", *Journal of South Asian Studies*. 37(3), 215–231.